**தலைப்பு 178 - தெங்கு அபிவிருத்தி மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தியில் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

தெங்கு அபிவிருத்தி மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2015 ஆகஸ்ட் 06 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்

பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த நிதிஏற்பாடு மற்றும் செலவினம்**

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,941.65 மில்லியனாக ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 1,717.52 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், அமைச்சின் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 224.13 மில்லியன் அல்லது 11.5 சதவீதம் ஆகும். விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | சேமிப்பு தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டு வருபவை | 952.10 | 913.17 | 38.94 | 4.09 |
| மூலதனம் | 989.55 | 804.35 | 185.19 | 18.72 |
| மொத்தம் | 1,941.65 | 1,717.52 | 224.13 | 11.54 |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 17801 | 5.0 | 4.8 | 1.0 | 2.7 | 10.0 | 8.5 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கட்டுநிதி மீதி ரூபா 172,186 ஆகும்.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கு மீதி ரூபா 915,022 ஆகும்.

**2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தெங்கு அபிவிருத்தி மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டவாறு முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான அவதானிப்புக்கள் 3.1 ஆம் பந்தி முதல் 3.5 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. தலைப்பு 178 - தெங்குஅபிவிருத்தி மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு**

**3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1.4 மில்லியன் மொத்தத் தேறிய நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பதின்மூன்று செலவின விடயங்களுக்காக ரூபா 175,864,749 மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டில் 25 சதவீதத்திற்கும் 70 சதவீதத்திற்கும் இடையில் அமைந்திருந்தது.

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் படி 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை 2015 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சினால் அந்த அறிக்கை 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 இணக்கமின்மை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுக் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள் | | |
| அரசாங்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டம் | 615,829 | 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை ஊழியர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்ட அரச ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு நிதியத்திற்கு கால தாமதத்தின் பின்னர் 2014 ஆம் ஆண்டின் போது அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்

-----------------------------------

| | | |
|---|---|---|
| (i) நிதிப்பிரமாணம் 1646 | - | வாகனக் குழாமில் உள்ள 06 வாகனங்களது நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்தப் பொழிப்பு அறிக்கைகள் என்பன மாதம் முடிவடைந்து அடுத்தவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 1647(ஆ) | - | வாகனங்கள் மற்றும் வாகனங்களுடன் தொடர்புடைய உபகரணங்கள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(இ) திறைசேரிச் சுற்றறிக்கை

-----------------------------------

| | | |
|---|---|---|
| (i) 1978 தசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை |
| (ii) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | கணனி உபகரணங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்தப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்க வில்லை. |

## 3.4 செயலாற்றல்

------------------------

**பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்**

திறைசேரிச் செயலாளரின் முறையான அங்கீகாரமின்றி 2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் வெலிகமயில் தென்னையோலை வெளிறல் மற்றும் அழுகுதல் நோயை ஒழிக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 200 மில்லியன் நிதி ஏற்பாட்டில் ரூபா 5 மில்லியன் அமைச்சினால் தெங்குப் பயிர்ச் செய்கைச் சபைக்கு 2014 செப்தெம்பர் 02 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. சபையினால் அந்தத் தொகையில் ரூ 4.9 மில்லியன் அம்பாந்தோட்டை மெதமுலனையில் அமைந்துள்ள தென்னிலங்கை தெங்கு அபிவிருத்தி பயிற்சி நிலையத்தின் அபிவிருத்திக்காக செலவிடப்பட்டிருந்தது.

## 3.5 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 06 | 05 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 09 | 04 | 05 |
| (iii) | இரண்டாம் நிலை | 765 | 478 | 287 |
| (iv) | ஆரம்ப நிலை | 20 | 20 | - |
| | மொத்தம் | 800 | 507 | 293 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 293 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.